DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

----

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.2 COURT, SATTUR

| | |
|---|---|
| Name : திரு. பால்ராஜ் | Father/Husband Name : நாராயணசாமி |
| Age : 55 | Village : ஆலங்குளம் |
| Taluk : | Calling : சிறப்பு சார்பு ஆய்வாளர் |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 17.07.2026.

(A1 present. A2 not present. Petition under Section 317 CrPC filed and allowed.)

**முதல் விசாரணை** :-

1. நான் தற்போது வெம்பக்கோட்டை காவல் நிலையத்தில் சிறப்பு சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன்.

2. வெம்பக்கோட்டை காவல் நிலையத்தில் பணியாற்றிய சார்பு ஆய்வாளர்கள் திரு.இராமமூர்த்தி மற்றும் வேலுச்சாமி ஆகியோர்களையும், அவர்களுடைய கையெழுத்தும் எனக்கு நன்கு தெரியும். அவர்கள் இந்த வழக்கில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து, பின்னர் புலன் விசாரணை செய்து இறுதி அறிக்கை தாக்கல் செய்தது குறித்து ஆவணங்களின் அடிப்படையில் என்னால் சாட்சியம் அளிக்க முடியும்.

3. கடந்த 17.06.2023 ம் தேதி 19.00 மணிக்கு வெம்பக்கோட்டை காவல் நிலையத்தில் சார்பு ஆய்வாளர் திரு.இராமமூர்த்தி நிலைய அலுவலில் இருந்தபோது வெம்பக்கோட்டை காவல்நிலைய எழுத்தர் தன்னிடம் ஆஜர்படுத்திய சமுதாய பதிவேடுகளை பார்வையிடு 02.06.2023 ம் தேதி வெம்பக்கோட்டை காவல் நிலைய எழுத்தர் பதிவு செய்த மனு ரசீது எண்.170/2023 ஐ பார்வையிட்டு மனுவின் தன்மைகேற்ப வெம்பக்கோட்டை காவல் நிலைய குற்ற எண்.159/2023, பிரிவுகள் 427, 323, 294(b) இ.த.ச –ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார். முதல் தகவல் அறிக்கையுடன் அசல் புகார் மனுவை இணைத்து கணம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்துள்ளார். **(சி.எஸ்.ஆர் மனு ரசீது அ.சா.ஆ.3 ஆகவும், முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ. 4 ஆக குறியீடு செய்யப்படுகிறது).**

4. பின்னர் வழக்கை புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு17.06.2023 ம் தேதி 20.00 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் பொன்னுச்சாமி மற்றும் சரவணன் ஆகியோர் முன்னிலையில் பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார். **(பார்வை மகஜர் அ.சா.ஆ. 5 ஆகவும், மாதிரி வரைபடம் அ.சா.ஆ 6 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது).** இவ்வழக்கில் சம்பவ இடத்தில் கிடந்த கண்ணாடியின் உடைந்த துண்டுகளை அத்தாட்சி தயார் செய்து கைப்பற்றியுள்ளார். **(அத்தாட்சி அ.சா.ஆ.7 ஆகவும், கண்ணாடி துண்டுகள் அ.சா.பொ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)**

5. பின்னர் இவ்வழக்கின் சாட்சிகள் பாலகிருஷ்ணன், சரவணன், சக்கம்மாள், முருகன், சித்திரை செல்வம் ஆகியோர்களை தனித்தனியாக விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார்.

6. இவ்வழக்கின் எதிரியை தேடிவந்த நிலையில் எதிரியானவர் நீதிமன்றத்தில் ஆஜராகி நீதிமன்ற பிணையில் சென்றுள்ளார் என்பதை தெரிந்து கொண்டுள்ளார். வழக்கு சொத்துக்களை படிவம் 91 மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பியுள்ளார் (**படிவம் –91 அ.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்படுகிறது**).

7. பின்னர் தனது விசாரணையிலிருந்தும், சாட்சிகளின் விசாரணையிலிருந்தும் சம்பவம் உண்மை என தெரியவந்து எதிரி மீது 427, 323, 294(b)– இ.த.ச ன் கீழான குற்றங்களுக்கு குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை –</u>**

8. பொய்யான புகார் மனு பெற்று, எதிரிகளுக்கு எதிராக இந்த வழக்கு பொய்யாக பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. வழக்கு ஆவணங்கள் மற்றும் சொத்து பொருட்கள் அனைத்தும் எதிரிகளுக்கு எதிராக காவல் நிலையத்தில் வைத்து உற்பத்தி செய்யப்பட்டது என்றால் சரியல்ல. வழக்கிற்கும், எதிரிகளுக்கும் எவ்விதமான சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல. சாட்சிகளை சரிவர விசாரணை செய்யாமல் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

Taken down by me/before me in open court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct.

Judicial Magistrate 2, Sattur.